02

# பொருளியல்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

**கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி மற்றும் சந்தைச் சமநிலையைப் பகுப்பாய்வு செய்வார்.**

## பகுதி 1

01 முதல் 20 வரையிலான ஒவ்வொரு கேள்விக்கும் கொடுக்கப்பட்ட பதில்களில் இருந்து சரியான அல்லது மிகவும் பொருத்தமான பதிலைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பொருள் தொடர்பாக காணப்படும் கேள்வி மற்றும் கேள்வித் தொகை இடையிலான வேறுபாடாவது,
   (1). கேள்வியில் விலை மாறும் போது கேள்வித் தொகையில் ஏனைய காரணிகள் நிலையாக இருக்கும்.
   (2). கேள்வி என்பது பொருள் தொடர்பாக மாற்று விலை கணிப்பிடும் போது நுகர்வோர் கொள்வனவு செய்யும் விலையாவதோடு கேள்வித் தொகை குறித்த விலையில் கேள்வித் தொகையாகும்.
   (3). கேள்வி என்பது கேள்வி கோட்டின் ஒரு புள்ளியாக காணப்படுவதுடன் கேள்வி, கேள்வி கோட்டின் மூலம் குறித்துக் காட்டப்படும்.
   (4). கேள்வி தொகை மாற்றத்தின் போது ஏனைய காரணிகள் மாற்றமடைவதுடன் கேள்வி மாற்றத்தின் போது விலை மட்டும் மாற்றமடையும்.
   (5). விலை மாற்றமடைவதனால் கேள்வி மாற்றமடைவதுடன் கேள்வி தொகை மாற்றமடைவது ஏனைய காரணிகளில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் மாற்றத்தினாலாகும்.

2. சந்தையில் விற்கப்படும் ஒரு குறித்த பொருளின் கேள்வி அதிகரிப்பதால் ஏற்படுவது கீழே உள்ளவற்றில் எச்செயற்பாட்டின் மூலமாக,
   (1). குறித்த பொருளின் விலை குறைதல்
   (2). குறித்த பொருளின் விலை அதிகரித்தல்
   (3). நுகர்வோர் வருமானம் குறைதல்
   (4). நிரப்பு பொருட்களின் விலை குறைதல்
   (5). மாற்றுப் பொருட்களின் விலை குறைதல்

3. அரிசி சந்தையில் அரிசிக்கான கேள்வித் தொகை அதிகரிப்பதில் செல்வாக்கு செலுத்தும் காரணியாவது,
   (1). அரிசியின் விலை அதிகரித்தல்
   (2). பாண் விலை அதிகரித்தல்
   (3). நுகர்வோன் வருமானம் அதிகரித்தல்
   (4). நுகர்வோரின் மெய் பெறுமானம் அதிகரித்தல்
   (5). அரிசி தொடர்பாக நுகர்வோரின் அலை அதிகரித்தல்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

4. நுகர்வோன் வருமானத்தில் ஏற்படும் மாற்றம் சாதாரண பண்டம் மற்றும் இழிவு பண்டத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தை மிகச் சரியான விடையை தெரிவு செய்க.

| | வருமான மாற்றம் | சாதாரண பண்டம் | இழிவுப் பண்டம் |
|---|---|---|---|
| (1). | வருமானம் அதிகரித்தல் | கேள்வி அதிகரிக்கும் | கேள்வி குறையும் |
| (2). | வருமானம் குறைதல் | கேள்வி அதிகரிக்கும் | கேள்வி அதிகரிக்கும் |
| (3). | வருமானம் அதிகரித்தல் | கேள்வி குறையும் | கேள்வி அதிகரிக்கும் |
| (4). | வருமானம் குறைதல் | கேள்வி குறையும் | கேள்வி குறையும் |
| (5). | வருமானம் அதிகரித்தல் | கேள்வி குறையும் | கேள்வி குறையும் |

5. குறித்த பொருளின் எதிர்காலத்தில் விலை அதிகரிக்கும் என எதிர்பார்த்தால்,
   (1). நிரம்பல் கோடு வலது புறமாக நகர்வடையும்
   (2). நிரம்பல் கோடு இடது புறமாக நகர்வடையும்
   (3). நிரம்பல் கோடு மீது மேல்நோக்கி நகர்வடையும்
   (4). நிரம்பல் கோடு மீது கீழ்நோக்கி நகர்வடையும்
   (5). நிரம்பல் கோடு வலது புறமாக நகர்வடைந்து மேல்நோக்கி நகர்வடையும்

6. $x$ பொருளின் உற்பத்திச் செலவு குறைவடைவதன் காரணமாக $y$ பொருளின் கேள்வி அதிகரித்தல் $x$ மற்றும் $y$ பொருள் தொடர்பில் சரியான கூற்றாக அமைவது,
   (1). $x$ இழிவு பண்டம் ஆவதோடு $y$ கிபன் பண்டமாகும்
   (2). $x$ கிபன பண்டம் ஆவதோடு $y$ இழிவு பண்டமாகும்
   (3). $x$ மற்றும் $y$ பிரதியீட்டு பண்டமாகும்
   (4). $x$ மற்றும் $y$ இணைப்புப் பண்டமாகும்
   (5). $x$ சாதாரண பண்டம் ஆவதோடு $y$ இழிவு பண்டமாகும்

7. ஞன ஸ்ரீ 200 - 4p மற்றும் ஞள ஸ்ரீ - 40 + 6p சமநிலையில் தேவை மற்றும் வழங்கல் நெகிழ்ச்சித்தன்மைஇ

(1) Ed = -0.92
Es = 1.38

(2) Ed = 0.92
Es = -1.5

(3) Ed = - 1.5
Es = 0.75

(4) Ed = -0.5
Es = 1.5

(5) Ed = - 1.5
Es = 1.38

8. மென்பானங்கள் தொடர்பில் கேள்வி ஒப்பீட்டில் நெகிழ்வுடையதாகும். மென்பானங்களின் நிரம்பல் அதிகரித்தால் ஏற்படும் விளைவு,
   (1). மொத்த வருமானம் அதிகரித்து விலை குறைவடையும்
   (2). மொத்த வருமானம் அதிகரித்து விலை அதிகரிக்கும்
   (3). மொத்த வருமானம் மாற்றமடையாமல் காணப்பட விலை நிலையாக காணப்படும்
   (4). மென்பானங்கள் தொடர்பில் மிகை நிரம்பல் காணப்படல்
   (5). மென்பானங்கள் தொடர்பில் மிகை கேள்வி காணப்படல

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

9. இடப்புறத்திலிருந்து வலப்பக்கமாக கீழ் நோக்கி சரிவடையும் கேள்வி கோட்பாட்டுடன் சாதாரண பண்டம் தொடர்பான சரியான கூற்று யாது?

| | விலை கேள்வி நெகிழ்ச்சி | வருமான கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|---|
| (1). | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2). | குறையும் | குறையும் |
| (3). | சமம் | சமம் |
| (4). | அதிகரிக்கும் | குறையும் |
| (5). | குறையும் | அதிகரிக்கும் |


10. போட்டி சந்தையில் விற்பனையாகும் பண்டத்தின் கேள்வி சமன்பாடு $Qd = 120 - 2p$ ஆகும். இந்த பண்டத்தின் சந்தையில் சமநிலை விலை ரூ.30 ஆகும். சந்தை விலையில் நெகிழ்ச்சி

(1). 0.6 (2). 0.3 (3). 1 (4). 2 (5). -1

11. கீழே ஒரு பண்டம் தொடர்பான நிரம்பல் சமன்பாடு காட்டப்பட்டுள்ளது. $Qs = 2p$ குறித்த பொருளின் நெகிழ்ச்சி தொடர்பான உமது கருத்து யாது?

(1). பூரண நெகிழ்வற்றது
(2). நெகிழ்வற்றது
(3). அலகு நெகிழ்ச்சி
(4). நெகிழ்வுள்ளது
(5). பூரண நெகிழ்வுள்ளது

12. கீழே குறித்த பொருளுக்கான கேள்விக் கோடு காட்டப்பட்டுள்ளது.




இந்த வரைபடத்தில் $A$ புள்ளி மற்றும் $B$ புள்ளியின் நெகிழ்ச்சி முறையே,

| | $A$ புள்ளி | $A$ புள்ளி |
|---|---|---|
| (1). | உறுதியாக கூற முடியாது | நெகிழ்வற்றது |
| (2). | நெகிழ்வற்றது | நெகிழ்வுள்ளது |
| (3). | நெகிழ்வுள்ளது | நெகிழ்வுள்ளது |
| (4). | பூரண நெகிழ்வுள்ளது | நெகிழ்வுள்ளது |
| (5). | நெகிழ்வுள்ளது | அலகு நெகிழ்வுள்ளது |

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

13. சந்தையில் பண்டம் தொடர்பான கேள்வி சமன்பாடு $Qd = 100 - 2p$, நிரம்பல் சமன்பாடு $Qs = 3p$ ஆகும். சந்தை சமநிலையில் நுகர்வோர் மற்றும் பொருளாதார மிகை,

| | நுகர்வோர் மிகை | உற்பத்தி மிகை |
|---|---|---|
| (1). | 90 | 60 |
| (2). | 60 | 90 |
| (3). | 900 | 600 |
| (4). | 600 | 900 |
| (5). | 150 | 200 |

14. குறித்த பொருளின் விலை ரூ.25 ஆகும் போது கேள்வித் தொகை அலகுக்கு 300 ஆகும். விலை கேள்வி நெகிழ்ச்சி -3 பண்டமாகும் கேள்வி தொகை அலகுக்கு 480 ஆவது எவ்விலையில் ஆகும்?

(1). ரூ.12.50 (2). ரூ.15 (3). ரூ.18 (4). ரூ.20 (5). ரூ.30


15. மறை பெறுமதியுடைய கிடையச்சை வெட்டிச் செல்லும் நிரம்பல் கோட்டின் நெகிழ்ச்சி தொடர்பின் சரியான கூற்றாக அமைவது,
   (1). ஒவ்வொரு புள்ளியிலும் நெகிழ்ச்சி தன்மை ஒன்றுக்கு குறைவாகவும் வெளியீடு மிக உயர்ந்த மதிப்பாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
   (2). ஒவ்வொரு புள்ளியிலும் நெகிழ்ச்சி தன்மை ஒன்றுக்கு குறைவாகவும் வெளியீடு அதிகபட்சமாக இருக்கும்
   (3). ஒவ்வொரு புள்ளியிலும் நெகிழ்ச்சி தன்மை ஒன்றை விட கூடுதலாக இருப்பதோடு, வெளியீடு அதிகமாக இருக்கும்
   (4). ஒவ்வோரு புள்ளியிலும் நெகிழ்ச்சி ஒன்றை விட கூடுதலாக காணப்படுவதோடு வெளியீடு அதிகமாக காணப்படும்
   (5). ஒவ்வோரு புள்ளியிலும் நெகிழ்ச்சி ஒன்றை விட கூடுதலாக காணப்படுவதோடு அது பூரண நெகிழ்வற்றதாக காணப்படும்.

16. சந்தையில் குறித்த பொருளுக்கான கேள்வி அதிகரிக்கும் விகிதத்தில் நிரம்பல் அதிகரிக்குமானால்,
   (1). சமநிலை விலை அதிகரிக்கும் போது சமநிலை தொகை அதிகரிக்கும்
   (2). சமநிலை விலை அதிகரிப்பதோடு சமநிலை தொகை மாற்றமடைவது உறுதியில்லை
   (3). சமநிலை தொகை அதிகரிப்பதோடு சமநிலை விலை மாற்றமடைவது உறுதியாக கூற முடியாது.
   (4). சமநிலை தொகை மாற்றமடையாமல் இருப்பதோடு சமநிலை விலை மாற்றமடைவது உறுதியில்லை.
   (5). சமநிலை விலை மாற்றமடைவதோடு சமநிலை தொகை அதிகரிக்கும்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

17. பொருள் ஒன்று நலன்புரி சங்கம் ஒன்றினால் இலவசமாக வழங்கப்படுகின்ற போது காணப்பட்ட பொருளாதார சிக்கல் காரணமாக குறித்த பொருளுக்கு ரூ.10 அலகு விலையாக அறவிட தீர்மானித்தது. குறித்த பொருளுக்கான கேள்வி சமன்பாடு $Qd = 100 - 4p$ எனின், குறித்த விலை அறவீடு காரணமாக
   (1). நுகர்வோர் கேள்வி பூச்சியம் வரை குறைவடையும்
   (2). நுகர்வோர் மிகை 450 ஆக குறையும்
   (3). நுகர்வோர் மிகை 1250 ஆக குறையும்
   (4). நுகர்வோர் மிகை 800 ஆக குறையும்
   (5). நுகர்வோருக்கு குறிப்பிடத்தக்க தாக்கம் இருக்காது

18. $x$ பொருள் தொடர்பாக சந்தை நிலை கீழே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




மேலே வரைபட்த்தின் படி சமநிலை தொகை அலகுக்கு விற்பனையின் போது உற்பத்தியாளர் எதிர்பார்க்கும் குறைந்தபட்ச விலையாவது,
   (1). ரூ.1000
   (2). ரூ.200
   (3). ரூ.400
   (4). ரூ.600
   (5). ரூ.800

19. குறித்த சந்தையில் விற்கப்படும் $A$ பண்டத்திற்கு உடைய பிரதி பண்ட விலை குறைவதால் $A$ பண்டம் சந்தையில்,
   (1). கேள்வி அதிகரிக்கும், விலை அதிகரிக்கும், கேள்வித்தொகை குறையும்
   (2). கேள்வி அதிகரிக்கும், விலை அதிகரிக்கும், கேள்வித்தொகை அதிகரிக்கும்
   (3). கேள்வித்தொகை அதிகரிக்கும், விலை குறையும், நிரம்பல் குறையும்
   (4). கேள்வித்தொகை குறையும், விலை குறையும், நிரம்பல் குறையும்
   (5). கேள்வி அதிகரிக்கும், விலை மாறாது, கேள்வித்தொகை அதிகரிக்கும்

20. சந்தை சமநிலை உட்பட்ட நிபந்தனை அல்லாதது,
   (1). கேள்வித்தொகை நிரம்பல் தொகைக்கு சமமாக அமையும் போது
   (2). நுகர்வோர் மிகை உற்பத்தியாளர் மிகைக்கு சமமாக அமையும் போது
   (3). மிகை கேள்வி, மிகை நிரம்பல் பூச்சியமாகும்.
   (4). நுகர்வோர் செலவு உற்பத்தியாளர் வருமானத்திற்கு சமமாகும்
   (5). சந்தையின் விலையில் மாற்றம் காணப்படாது.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH